**ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 19 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 20 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஆராய்ச்சிக்கட்டு பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சித் திணைக்களத்திடமிருந்து நன்கொடையாகக் கிடைத்த எண்ணெய் விசிறும் இயந்திரத்தின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய நீர் வரி வருமானம் ரூபா 95,150 தொகை நாட்குறிப்பு 55 இன் மூலம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் நீர் வரி வருமானம் அந்த அளவால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நிர்மாணப் பிரிவில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எஞ்சிய இருப்பான ரூபா 6,037 தொகையான பொறியியல் கல் மற்றும் 8''x24'' `ஹியூப் குழாய் என்பவற்றின் பெறுமதி ரூபா 127,540 எஞ்சிய இருப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்காக செலுத்தவேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 71,160 தொகை ரூபா 100,000 ஆகக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2005 ஆம் ஆண்டிற்குரிய மூலதன மானியம் ரூபா 1,033,173 தொகை அவ்வாண்டின் வருமானச் செலவினக் கணக்கில் செலவு வைக்கும் போது மீண்டும் மீளாய்வாண்டில் நாட்குறிப்புப் பதிவு 29 இன் மூலம் திரண்ட நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 99,969 பெறுமதியான 02 விடயங்களுக்குரிய விரிவான பட்டோலை காணப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஏற்பாடுகளுடன் இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 571 | ரூபா 776,086 பெறுமதியான காலாவதியான இருப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கோ அல்லது தேவையான சீராக்கங்களைச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 396 | வழங்கப்பட்ட எனினும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களைக் கடந்த ரூபா 21,892 பெறுமதியான 11 காசோலைகள் தொடர்பாக சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,855,078 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,873,960 ஆக இருந்தது. மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் முறையே ரூபா 73,023,133 தொகை மற்றும் ரூபா 15,189,115 தொகையான மூலதன மானியம் மற்றும் ரூபா 73,805,319 மற்றும் ரூபா 16,210,883 தொகையான மூலதனச் செலவினம் கணிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் அதன் மிகை முறையே ரூபா 1,072,892 மற்றும் ரூபா 3,852,192 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 2,779,300 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

(அ) மீளாய்வாண்டின் போது சபையின் மொத்த செயற்பாட்டு வருமானம் ரூபா 48 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் மொத்த செயற்பாட்டு வருமானம் ரூபா 41 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 07 மில்லியன் அதிகரிப்பாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் போது மீண்டெழும் செலவினம் ரூபா 46 மில்லியனாக இருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டின் செலவினமான ரூபா 36 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 10 மில்லியன் அதிகரிப்பாகும்.

(இ) மீளாய்வாண்டில் மூலதன வருமானம் ரூபா 73 மில்லியனாக இருந்ததுடன், அது முன்னைய ஆண்டின் மூலதன வருமானமான ரூபா 15 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 58 மில்லியன் அதிகரிப்பாகும். மீளாய்வாண்டின் போது மூலதனச் செலவினம் ரூபா 74

மில்லியனாக இருந்ததடன் அது முன்னைய ஆண்டை விட ரூபா 58 மில்லியனால் அதிகரித்திருந்தது.

(ஈ) மேற்கூறப்பட்ட நிலைமையின் காரணமாக ஆண்டிற்கான மிகை ரூபா 01 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் மிகையான 4 மில்லியனுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 3 மில்லியன் நிதி விளைவில் குறைவடைந்திருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் முன்னைய வருடத்துடன் ஒப்பீடு செய்து கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2015 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|
| **வருமான விடயம்** | **பாதீடு செய்யப்பட்ட** | **உள்ள படியான** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை** | **பாதீடு செய்யப்பட்ட** | **உள்ள படியான** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை** |
| | **ரூபா 000** | **ரூபா 000** | **ரூபா 000** | **ரூபா 000** | **ரூபா 000** | **ரூபா 000** |
| வீதவரியும் வரியும் | 2,749 | 2,852 | 9,550 | 2,924 | 1,712 | 10,702 |
| வாடகை | 2,545 | 2,319 | 6,876 | 2,532 | 1,636 | 6,317 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 775 | 1,195 | -- | 975 | 1,002 | -- |
| ஏனைய வருமானம் | 42,606 | 37,123 | 29,516 | 35,176 | 28,087 | 28,496 |

2.3.2 **பட்டியலிடப்பட்ட வருமானத்தில் சேகரிக்கப்பட்ட வருமானம்**

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட வருமானம் சேகரித்தல் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமானத் தலைப்பு | வருமானம் பட்டியலிடல் | | | வருமானம் சேகரித்தல் | | | | நிலுவையாக இருந்த வருமானம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015.01.01 இல் உள்ளவாறு நிலுவை | 2015 ஆம் ஆண்டின் பட்டியலிடல் | மொத்தம் | 2015.12.31 வரை நிலுவையில் சேகரிக்கப்பட்ட தொகை | பட்டியலிடலில் சேகரிக்கப்பட்ட தொகை | எதிர்வரும் வருடத்திற்காக கிடைத்த தொகை | மொத்தம் | 2015.01.01 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலுவையில் எஞ்சிய தொகை | பட்டியலிடப்பட்ட வருமானத்தில் நிலுவை | 2015.12.31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஆதனவரி | 9,314,227 | 2,674,248 | 11,988,475 | 1,788,963 | 1,017,650 | 45,543 | 2,852,156 | 7,525,263 | 1,656,598 | 9,181,860 |
| ஏக்கர் வரி | 387,954 | 37,879 | 425,833 | 51,722 | 5,233 | 483 | 57,438 | 336,232 | 32,645 | 368,877 |
| நீர் வரி | 626,696 | 250,700 | 877,396 | 282,666 | 90,700 | 1,800 | 375,166 | 344,030 | 160,000 | 504,030 |
| கடை வாடகை | 548,540 | 237,850 | 786,390 | 172,650 | 37,640 | 10 | 210,300 | 375,890 | 200,209 | 576,099 |
| வாடகை | 5,639,620 | 2,265,025 | 7,904,645 | 656,189 | 1,452,351 | | 2,108,540 | 4,983,431 | 812,673 | 5,796,104 |

### 2.3.3 ஆதன வரி

(அ) மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட ஆதன வரியான ரூபா 2,674,248 தொகையில் ஆண்டின் போது ரூபா 1,017,650 தொகை மாத்திரமே சேகரிக்கப்பட்டிருந்தது. அது பட்டியலிட்ட தொகையில் 38 சதவீதமாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியளவில் சபையின் ஒட்டுமொத்த ஆதனவரி நிலுவை ரூபா 9,181,861 ஆனமையால் உரிய காலப்பகுதியில் வருமானம் சேகரித்தல் தொடர்பான செயல்முன்னேற்றம் நலிவான நிலையில் காணப்பட்டது.

(இ) சபை அதிகாரப் பிரதேசத்தில் ஆதன வரி மற்றும் ஏக்கர் வரி செலுத்தாதிருந்த நபர்களுக்கு சொந்தமான அசையாத ஆதனங்கள் தடுத்து வைக்கப்பட்டு நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 முத்திரைக் கட்டணம்

மாகாண சபையினால் பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடப்பட்டிருந்த முத்திரைக் கட்டணங்களிலிருந்து 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு அறவிட வேண்டியிருந்த முத்திரைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 22,010,858 ஆகும். அதில் ரூபா 9,089,676 தொகையொன்று 2008 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையாக இருந்ததுடன், 05 வருடங்களுக்கு மேற்பட்ட இந்த பழைய மீதி தீர்க்கப்படாமல் தொடர்ந்தும் பேணிச் செல்லப்படுதல் சபையின் மீளாய்வாண்டின் இறுதியில் நிதி நிலைமை மாற்றங்கள் கூற்றில் சொத்துக்கள் பகுதி தேவையற்ற வகையில் அதிகரித்துக் காண்பிக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

### 2.3.5 நீதிமன்றத் தண்டப் பணம்

மாகாணத்தின் பிரதம செயலாளரிடமிருந்து 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப் பணங்களின் பெறுமதி ரூபா 7,504,809 ஆகும். அதில் ரூபா 1,939,309 தொகை 2005 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான நீதிமன்றத் தண்டப் பணமாகும்.

### 2.3.6 வாடகை

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 5,979,606 ஆக இருந்ததுடன் அதில் 2001 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலான நிலுவை வாடகை ரூபா 4,988,842 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை கடை வாடகை ரூபா 576,100 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 532,800 தொகையான நிலுவை மீதியின் நிலுவைக் காலம் 02 இற்கும் 09 வருடங்களுக்கும் இடையிலானதாக இருந்தமையால் கடை வாடகை வருமானம் சேகரித்தல் நலிவான நிலையில் காணப்பட்டது.

### 2.3.7 காணி விற்பனை அடிப்படையிலான வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேச எல்லைக்குள் காணி விற்பனையிலிருந்து பெறப்பட்ட பணத்தில் 01 சதவீதம் சபையினால் அறவிடப்பட வேண்டிய போதிலும், மதிப்பீட்டு விற்பனைப் பெறுமதியல் 01 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.8 நீர்க் கட்டணம்

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 270,036 ஆக இருந்ததுடன் நீர்க் கட்டணம் அறவிடல் மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டது. நீர்க் கட்டண நிலுவைக் காலம் 01 இற்கும் 07 வருடங்களுக்கும் இடையில் இருந்ததுடன் நீர்ப்பாவனையாளர்கள் 23 பேராக இருந்தனர்.

### 2.3.9 ஏக்கர் வரி

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஏக்கர் வரி ரூபா 368,394 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 170,501 தொகையான நிலுவை மீதியின் நிலுவைக் காலம் 08 வருடங்களை விஞ்சியிருந்ததுடன் ஏக்கர் வரி வருமானம் சேகரித்தல் நலிவான நிலையில் காணப்பட்டது.

## 2.4 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் சபையின் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்குரிய முரண்களுடன் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவின விடயம் | 2015 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதிடப்பட்ட | உள்ள படியான | முரண்கள் | பாதிடப்பட்ட | உள்ள படியான | முரண்கள் |
| **மீண்டெழும்செலவினம்** | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| ஆளணி வேதனங்கள் | 35,262 | 33,438 | 1,824 | 27,310 | 22,777 | 4,533 |
| ஏனையவை | 13,240 | 12,593 | 647 | 12,580 | 13,362 | (782) |
| உப மொத்தம் | 48,502 | 46,031 | 2,471 | 39,890 | 36,139 | 3,751 |
| மூலதனச் செலவினம் | 1,500 | 73,805 | (72,305) | 17,000 | 16,211 | 789 |
| மொத்தக் கூட்டுத்தொகை | 50,002 | 119,836 | (69,834) | 56,890 | 52,350 | 4,540 |

மேலுள்ள அட்டவணையின் பிரகாரம் மீளாய்வாண்டில் மூலதன செலவினங்கள் பாதீடிடப்பட்ட அளவினை விட ரூபா 72,305 மில்லியனால் செலவினம் அதிகரித்திருந்தது.

## 2.5 மிகைக் கட்டணம்

ஆராய்ச்சிக்கட்டுவ வாராந்த சந்தைக் கட்டணம் சேகரிக்கும் உரித்து 2005 ஆம் ஆண்டில் வாடகைக்கு வழங்கியமைக்காக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 901,705 வாடகைப் பணம் அறவிடப்படாமை தொடர்பாக சபையின் தலைவரை உள்ளடக்கிய உத்தியோகத்தர்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் 2011 மார்ச் 24 ஆந் திகதி மிகைக் கட்டண

அறிவித்தலொன்று வழங்கப்பட்டிருந்தது. அந்த தொகையிலிருந்து தவணைப் பணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 113,100 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 788,605 தொகை அறவிடவேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமுல்படுத்த வேண்டியிருந்த ரூபா 7,265,000 பெறுமதியான 18 செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்ததுடன் 02 செயற்திட்டங்களுக்காக மதிப்பிடப்பட்ட தொகையை விஞ்சி ரூபா 597,219 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஊழியர் தரம் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| மூன்றாம் | 01 | 01 | - | - |
| இரண்டாம் | 25 | 18 | 09 | 02 |
| ஆரம்ப | 52 | 56 | 04 | 08 |
| | 78 | 75 | 13 | 10 |

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு